# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப., (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 192/மா/2023**
**நாள் : 02.08.2023**

திரு. P. ஜனார்த்தனன்,
வியாசர்பாடி, சென்னை. – முறையீட்டு மனுதாரர்

மண்டல அலுவலர்,
மண்டலம்–4, பெருநகர சென்னை மாநகராட்சி. – எதிர்மனுதாரர்

பெருநகர சென்னை மாநகராட்சி, வியாசர்பாடி, முதலாவது பள்ளத் தெரு, கதவு எண்.16/2, என்ற முகவரியில் வசிக்கும் திரு. P. ஜனார்த்தனன் என்பவரின் 24.06.2023 நாளிட்ட மனு 30.06.2023 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 192/மா/2023 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவுசெய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலனை செய்யப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

"பெருநகர சென்னை மாநகராட்சி, வியாசர்பாடி, முதலாவது பள்ளத் தெரு, கதவு எண்16/2 என்ற முகவரியில் வசிக்கும் திரு. P. ஜனார்த்தனன் என்பவரின் 24.06.2023 நாளிட்ட முறையீட்டு மனுவில்,

"நான் மேற்கண்ட முகவரியில் குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். எங்களுடைய பகுதியில் எருக்கஞ்சேரி நெடுஞ்சாலை அமைந்துள்ளது. இந்த சாலையில் தொடர்ச்சியாக வாகன போக்குவரத்து நெரிசல் அதிகமாக உள்ளதால், பொது மக்கள், முதியோர் மற்றும் பள்ளி செல்லும் குழந்தைகள் சாலையை கடக்க மிகவும் கஷ்டப்பட்டு சாலையை கடந்து செல்கின்றனர். இதனால் நான் ஆன்லைனில் C.M. Cell-க்கு எங்கள் பகுதியில் உள்ள எருக்கஞ்சேரி நெடுஞ்சாலையில் ஒரு வேகத்தடை மற்றும் பாதசாரிகள் சாலையை கடந்து செல்ல வசதியாக White Painting அமைத்து தர கோரி விண்ணப்ப மனு அளித்து இருந்தேன். இன்று வரை எங்கள் பகுதிக்கு வேகத்தடை மற்றும் பாதசாரிகள் சாலையை வசதியாக கடக்க White Painting Symbol அமைத்து தரவில்லை. இது குறித்து தமிழ்நாடு

உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சம்பந்தப்பட்ட அலுவலருக்கு எங்கள் பகுதிக்கு வேகத்தடை மற்றும் Pedestrain Crossing White Painting அமைத்து தர, முறைமன்ற நடுவர் அவர்கள் உத்தரவிடுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

**2. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 20.07.2023 அன்று நேரடி விசாரணைக்கு வருமாறு 11.07.2023 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

மனுதாரர் 20.07.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகவில்லை.

**பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 4–ன் மண்டல அலுவலர் 20.07.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தனது பின்வரும் வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.**

சென்னை வியாசர்பாடி பள்ளத் தெரு மற்றும் எருக்கஞ்சேரி சாலையை கடக்கும் இடத்தில் பொது மக்களின் நலன் கருதி வேகத்தடை (Speed Breaker) அமைக்கும்படி மனுதாரரிடமிருந்து புகார் மனு பெறப்பட்டதைத் தொடர்ந்து, மேற்கண்ட இடம் ஆய்வு செய்யப்பட்டது. மேற்கண்ட சாலை நெடுஞ்சாலை துறையைச் சார்ந்ததால், நெடுஞ்சாலைத் துறை மற்றும் காவல் துறை உதவியுடன் மனுதாரர் குறிப்பிட்டுள்ள இடத்தில் வேகத் தடை அமைத்திட நடவடிக்கை மேற்கொள்ள ஆவன செய்யப்படும் என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

**இந்நேர்வில், மனுதாரர் மனு மற்றும் எதிர்மனுதாரரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்றத்தால் பரிசீலிக்கப்பட்டது.**

மனுதாரர் தன்னுடைய மனுவில் வியாசர்பாடி பள்ளத் தெரு மற்றும் எருக்கஞ்சேரி சாலை சந்திப்பில் பொது மக்கள் பாதுகாப்பாக கடந்து செல்ல வேகத்தடையும் மற்றும் சாலையின் இடையே பாதசாரிகள் சாலை கடந்து செல்லும் வண்ணம் வெள்ளை வர்ணம் பூசும்படி கோரியுள்ளார்.

2. பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்கள் தங்களது வாக்குமூலத்தில் மனுதாரர் குறிப்பிட்ட இடத்தை ஆய்வு செய்வதில் மேற்கண்ட சாலை நெடுஞ்சாலை துறையைச் சார்ந்ததால், நெடுஞ்சாலை துறை மற்றும் காவல் துறை உதவியுடன் மனுதாரர் குறிப்பிட்டுள்ள இடத்தில் வேதத்தடை அமைத்திட நடவடிக்கை மேற்கொள்ள ஆவன செய்யப்படும் என தெரிவித்துள்ளார்.

3. தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவச் சட்டம் 2015ல் உரிமையியல் நீதிமன்றத்தின் அந்தஸ்து, இம்முறைமன்றத்திற்கும் உள்ள நிலையில், மனுதாரர் மனு அளித்துவிட்டு நேரடி விசாரணைக்கு தனிப்பட்ட காரணங்களுக்காக வர இயலவில்லை என்று தெரிவித்து இருப்பது கண்டிக்கத்தக்கது. மனுதாரர் இனி வருங்காலங்களில் இதுபோன்ற நிகழ்வுகளை தவிர்க்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்.

4. மனுதாரர் வேகத்தடை அமைக்கும்படி கோரியுள்ள சாலை நெடுஞ்சாலை துறையைச் சார்ந்தது என்பதால் அச்சாலையில் வேகத்தடை அமைப்பது குறித்து பெருநகர சென்னை மாநகராட்சி

மண்டலம்-4ன் மண்டல அலுவலர் நெடுஞ்சாலைத்துறை/காவல் துறையின் ஒத்துழைப்போடு உரிய தொடர் நடவடிக்கை மேற்கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

2023–ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 02–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1. திரு. ஜனார்த்தனன்,
   த/பெ. பழனி,
   16/2, முதலாவது பள்ளத் தெரு, வியாசர்பாடி,
   சென்னை -600 039.
2. அரசு முதன்மைச் செயலாளர் / ஆணையாளர்,
   பெருநகர சென்னை மாநகராட்சி,
   ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.
3. மண்டல அலுவலர்,
   மண்டலம் - 4, பெருநகர சென்னை மாநகராட்சி,
   எண்.266, திருவொற்றியூர் நெடுஞ்சாலை,
   சென்னை – 600 021.
4. கண்காணிப்பு பொறியாளர்,
   மழைநீர் வடிகால்துறை, ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
   பெருநகர சென்னை மாநகராட்சி,
   ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.
5. தலைமைப் பொறியாளர்,
   நெடுஞ்சாலை துறை,
   சேப்பாக்கம், சென்னை – 600 005.

**நகல்:** மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்
3/8/23